Registered as a Newspaper

88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லை நாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு நாக நாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மாசி மீ 12 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 14 (24-02-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:84

★ இலங்கைத் தமிழர் படுகொலை

# இனியும் சகிக்க முடியாது

# ராஜீவிடம் எம். ஜி. ஆர்.

# முறைப்பாடு



எம். ஜி. ஆர்.

## 20 நிமிட நேரம் தொலைபேசியில் இருவரும் கருத்துப் பரிமாறினர்

சென்னை, பெப். 23

இலங்கையில் அந்த நாட்டு அரசாங்கம், திட்டமிட்ட முறையில் தமிழர்களை இனப் படுகொலை செய்து வருகிறது.

இதனை எம்மால் இனியும் சகித்துக் கொண்டு, பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் இன்று முறைப்பாடு செய்தார்.

இலங்கையின் இனப் பிரச்சினை, அரசாங்கம் நடத்தும் குண்டு வீச்சு, அக்கரைப்பற்றுக் கொடூரம், தமிழகத்தில் ஏற்படக்கூடிய கொந்தளிப்பு என்பன குறித்து பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரும் பொருட்டு 20 நிமிட நேரம் தொலைபேசியில் திரு எம். ஜி. ஆர். பேசினர். இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்து வரும் அரச வன்செயல்கள் குறித்து அவர் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தார்.

இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பாக அந்த நாட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். அதற்கு இலங்கை பதில் அனுப்பவில்லை எனில் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பதிலளித்தார்.

திரு. இராமச்சந்திரன் நேற்று ஞாயிற்றுக் கிழமை தொலைபேசி மூலம் திரு. காந்தியுடன் தொடர்பு கொண்டார்.

திரு. இராமச்சந்திரன் அச்சமயம் பாரதப் பிரதமரிடம் சொன்னதாவது:-

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் சில கிராமங்கள் மீது மிக மோசமான முறையில் விமானங்களில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன. இதனால் அப்பாவி தமிழ்ப் பொதுமக்கள் இறந்தனர்; பலர் காயமடைந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அக்கரைப்பற்றுப் பகுதியில் பல அப்பாவித் தமிழ் விவசாயிகள் கொல்லப் பட்டுள்ளனர். ஆயுதப் படையினரே இந்த மிருகத்தனமான செயலைச் செய்துள்ளனர்.

அரசு திட்டமிட்டுச் செய்து வரும் இனக் கொலைகள் காட்டுமிராண்டித்தனமானவை.

இதை எம்மால் சகித்துக்கொண்டு, பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

எந்த ஒரு நாட்டிலும் அரசின் ஆயுதப்படைகள் சொந்த நாட்டு மக்களை இப்படி ஈனத்தனமாகக் கொலை செய்தது கிடையாது.

அரசின் படைகள் அரசின் கட்டுப்பாட்டுக்குள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தவர் மனநோயாளியாம்

நல்லூர், பெப். 24

கடந்த வெள்ளிக் கிழமை பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக இறந்து கிடந்த லியோ மொருயஸ் செபஸ்தியாம்பிள்ளை ஒரு மனநோயாளி.

இவரது மரணம் தொடர்பான விசாரணையில் இந்த விடயம் தெரியவந்தது.

மரண விசாரணையை யாழ் நீதிவான் எஸ். வரதராஜன் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் நடத்தினர்.

மரண விசாரணையில் சாட்சியமளித்த இவரது சகோதரர் லியோ சந்தான மரியதாஸ் இறந்த தமது சகோதரர் ஒரு மனநோயாளி என்று தெரிவித்தார்.

## மார்க்கோஸை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி

மணிலா, பெப். 23

ஜனதிபதி பெர்டினன்ட் மார்கோஸுக்கு எதிரான கிளர்ச்சி வலுக்கின்றது.

மணிலாவில் உள்ள பொலீஸ் தலைமை அலுவலகத்தில் இரண்டு கிளர்ச்சிப் பிரிவுகள் தங்கள் துருப்புக்களைக் குவித்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சரும் இராணுவ உதவித் தலைவரும் தங்கள் பதவிகளில் இருந்து விலகிவிட்டனர்.

பொலீஸ் தலைமை அலுவலகத்தை பாதுகாப்பதில் தங்களுக்குக் கஷ்டம் இல்லை என்று கிளர்ச்சித் தலைவர்கள் சொன்னர்கள்.

இதனிடையில் கிளர்ச்சிப் படைகளின் ட்ரக்குகள், டாங்கிகள் மணிலாவை நோக்கி முன்னேறிக்கொண்டு இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சரணடையும் நோக்கம் எமக்கு இல்லை என்று முன்னாள் இராணுவ உப தலைவர் சொன்னர்.

அதே நேரத்தில் கிளர்ச்சியை அடக்க இரத்தம் சிந்தப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் ஜனதிபதி மார்க்கோஸ் சொன்னர்.

(முன்னர் வந்த செய்தி 2-ம் பக்கத்தில்)

## புளியம்பொக்கணையில் கட்டடங்கள் தகர்ப்பு

விசுவமடு, பெப். 24

புளியம்பொக்கணைச் சந்தியில் அமைந்துள்ள நெற் சந்தைப் படுத்தும் சபைக்குச் சொந்தமான இரண்டு கட்டடங்கள் இனந் தெரியாதவர்களால் நேற்று முன்தினம் இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. கட்டடங்கள் இரண்டும் முற்றாகச் சேதமடைந்தன.

இக்கட்டடத்துக்குள் இருந்த சுமார் ஐம்பதாயிரம் வெற்றுச் சாக்குகள் கடந்த வாரம் களவாடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளை நேற்று அதிகாலை கிளிநொச்சியிலிருந்து நடைபவனியாக புளியம்பொக்கணைப் பகுதிக்கு இராணுவத்தினர் வந்தனர். பின்னர் முல்லைத்தீவு வீதி வழியாகப் பரந்தன் சென்று கிளிநொச்சி முகாமுக்குச் சென்றனர். திரும்பிச் சென்றபோது பலரைக் கைதுசெய்து சென்றனர். இவர்களில் விசாரணையின் பின்னர் நேற்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

படையினர் திரும்பிச் செல்லும்போது சைக்கிள்களிலும் உழவு இயந்திரங்களில் தட்டிவான்களிலும் சென்றனர்.

## நான் ஆட்சியில் இருந்தால் தொண்டமான் வெலிக்கடையில்

### சிறிமாவோ அம்மையார் கூறுகிறார்

கொழும்பு, பெப், 24

நான் இன்று ஆட்சியில் இருந்தால் அமைச்சர் திரு. தொண்டமான் வெலிக்கடையில் இருந்திருப்பார்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னர்.

சுதந்திரக்கட்சி வருடாந்த மாநாடு கடந்த சனிக்கிழமை சுகததாச விளையாட்டரங்கில் நடந்தது.

12 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர், அவர்கள் மத்தியில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் வாழ முடியாத நிலை போன்று மலையகத்திலும் சிங்கள மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. தொண்டமானின் வற்புறுத்தலினால் தான் 94.000 மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட்டதை அன்றும் எதிர்த்தேன். இன்றும் எதிர்க்கிறேன்.

அன்று மலைநாட்டை மீட்டு செழிப்பாக வாழ்ந்த சிங்களவர்கள் இன்று ஓட ஓட விரட்டியடிக்கப்படுகிறார்கள்.

நான் இன்று பதவியில் இருந்தால் திரு. தொண்டமான் வெலிக்கடையில் இருந்து இருப்பார்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பது எனக்குப் பெரிய விடயம் அல்ல. நான் பதவியில் இருந்த போது எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டேன்.

கச்சதீவுப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை ஆகியவற்றை நான் தீர்க்கவில்லையா?

இந்த அரசாங்கம் முதலில் பதவி விலகட்டும். அதன் பின்னர் நாம் பதவிக்கு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம். —என்றார்

### முச்சந்திமுரளி



அம்மா ஏழு வருஷமா அரசியல் நடத்த முடியாமல் குடியுரிமை இல்லாமல் சிறையிலை இருந்தவ எல்லே, அதுக்கு வட்டி ஆரையும் சிறையிலை போட வேணும் எண்டு கை துருதுருக்குது போலை. தேவையில்லாமல் தொண்டமானேடை சருகிறு. அது நல்லதுக்கு இல்லை. . .!



ராஜீவ் காந்தி

## பார்வைக்கு வைக்கப்பட்ட குண்டு

நல்லூர், பெப் 24

உரும்பராய்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை விமானத்திலிருந்து வீசப்பட்டு வெடிக்காத நிலையிலிருந்த குண்டு ஒன்று நேற்று மக்கள் பார்வைக்காக யாழ். வின்சர் சந்தியில் வைக்கப்பட்டிருந்தது.

ஏராளமான பொது மக்கள் நேற்று இவ் வெடிகுண்டை பார்த்துச் சென்றனர்.

### சுபநேரம்

24- 02 - 1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12-30 முதல் 2-00 வரை

ராகுகாலம்;

8-00 முதல் 9-30 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

பூரணை விரதம்

மாசி மகம்

## பண்டாரி வருவாரா?

### பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்

### லலித் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

திரு பண்டாரி இலங்கை வருவதைப் பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

திரு. பண்டாரிக்கு புதிதாக அழைப்பு எதுவும் அனுப்பப்படவில்லை.

ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்பை ஏற்று திரு. பண்டாரி வருவதாக இருந்தது. பின்னர் அவரே தனது வருகையைப் பின் போட்டார். அந்த அழைப்பு இன்னும் உள்ளது.

பெப்ரவரி முடிவினுள் திரு பண்டாரி வருவது பற்றி முடிவாகவில்லை. அவரை எதிர்பார்க்கிறோம். பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இப்படி அமைச்சர் சொன்னர்.

### ஜீ. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சை

## கணித பாடத்தில் 90 சத வீத மாணவர் சித்தி அடையவில்லை

கொழும்பு, பெப்.24

1985 டிசம்பரில் நடந்த ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சையில் கணித பாடத்தில் 90 சத வீதமான பரீட்சார்த்திகள் சித்திஅடையவில்லை.

இப்படிப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது பற்றி விசாரணை நடத்தும்படி கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

1985 டிசம்பர் ஜி சி ஈ. பரீட்சையில் வழங்கப்பட்ட கணித பாடவினுத்தாள் புதுவிதமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்ததாம்.

இது மாணவரின் தகுதிக்கு மேற்பட்டதாக இருந்ததாக பெற்றோர்களும் மாணவர்களும் பரீட்சைத் திணைக்களத்துக்கு முறையிட்டு இருந்தனர்.

90 சதவீதமானவர்கள் கணித பாடத்தில் சித்தி அடையாததைத் தொடர்ந்துதான் அந்த முறைப்பாடுகள் பற்றி விசாரணை நடத்தும் படி அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார்.

## திருமலை, பட்டிருப்பு இடைத் தேர்தல் விரைவில்

கொழும்பு, பெப். 24

அக்மீமன தொகுதி இடைத் தேர்தலுடன் திருகோணமலை, பட்டிருப்புத் தொகுதிகளின் இடைத் தேர்தல்களையும் நடத்த அரசு தீவிர ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளது.

இது பற்றி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஹர்ஷா அபயகுணவர்த்தனவிடம் கேட்கப்பட்டது.

அவர் அச்சமயம் சொன்னதாவது;-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளில் தேர்தல் நடத்த ஜனதிபதி தீர்மானித்தால், சகல தொகுதிகளிலும் ஐ. தே. க. தனது வேட்பாளர்களை நிறுத்தும்.

இப்படி அவர் சொன்னர்.

# தாக்குதலை நிறுத்தினல் மட்டுமே பேச்சு

### லண்டனில் சிவா

லண்டன், பெப். 23

உரிமைகளைக் கேட்டால், தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படுகிறார்கள். தமிழர் மீதான தாக்குதலை அரசாங்கம் நிறுத்தினல் மட்டுமே நாம் பேச்சுவார்த்தைக்குப் போவோம்.

இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் லண்டனில் தெவித்தார்.

லண்டனில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மாணவர் சபை நடத்திய கருத்தரங்கில் 'தமிழர் பீதியும் அவர்களின் அபிலாஷைகளும்' —என்ற தலைப்பில் கடந்த சனிக்கிழமை (22.02.86) திரு. சிவசிதம்பரம் உரையாற்றினர்.

திரு. சிவசிதம்பரம் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசினர்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

உரிமைகளைக் கேட்டால் கொல்லப்படுகிறோம். தமிழர் மீதான தாக்குதல் முதலில் நிறுத்தப்பட்டாக வேண்டும். நிறுத்தப்பட்டால் தான் நாம் பேச்சுக்கள் நடத்துவோம்.

தமிழருக்கு கல்வி, தொழில்வாய்ப்பு முதலியன வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது.

இது விஷயத்தில் அர

(4- ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி இளைஞர்கள் கைது

கொழும்பு, பெப் 24

கொட்டாஞ்சேனையில் உணவு விடுதி ஒன்றில் இருந்த 3 வடபகுதி வாலிபர்கள் இரகசியப் பொலீஸாரினல் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டனர்.

## துப்பாக்கிச் சூட்டுக்கு லொறிச் சாரதி பலி

### வாழைச்சேனையில் பதற்றம்

மட்டக்களப்பு, பெப்.24

சத்துருக் கொண்டாவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் லொறிச் சாரதி ஒருவர் பலியானர்.

சனி பிற்பகல் நடந்த இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். பதற்றம் நிலவியது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் லொறி ஒன்று வந்து கொண்டிருந்தது. சத்துருக்கொண்டான் என்ற இடத்துக்கு அருகில் வைத்து இனந்தெரியாத நபர்கள் லொறியை வழிமறித்தனர். சாரதி லாவக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முரசுமோட்டைப் பகுதியில்

## சாரம் அணிந்த கோஷ்டி அட்டகாசம்!

### இளைஞர்கள் பலர் கைது

கிளிநொச்சி, பெப் 24

சாரமும் சேட்டுடனும் ஆயுதம் தரித்துச் சென்ற கோஷ்டி ஒன்று புளியம்பொக்கணை, தருமபுரம், முரசுமோட்டைப் பகுதியிலிருந்து பலரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றது.

இவ்வாறு கடந்த சனியன்று கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்ட 35பேர் அன்றையதினமே விடுதலை செய்யப்பட்டனர். இருவர் மட்டும் மேல் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில்

(4 ஆம் பக்கமும் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னணிப் பாடகி ஜானகியின் சாதனை

சிறந்த பின்னணிப் பாடகிகள் சிலரில் ஜானகியும் ஒருவர். அவருடைய பாணி தனியானது.

தலைசிறந்த திரைப் படப் பாடகி என மூன்று முறை ஜனாதிபதி விருது பெற்றிருக்கிறார் அவர்.

ஜானகியின் சாதனைப் பட்டியல் மிகவும் நீளமானது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, சிங்களம் என மொத்தம் பதினொரு மொழிகளில் சுமார் பத்தாயிரம் பாடல்கள் பாடியுள்ளார்.

எந்த மொழியில் பாடினாலும் அந்த மொழியே அவரது சொந்தமொழி என்பது போலப் பாவித்து உணர்ச்சி பாவத்திலும் உச்சரிப்பிலும் வெற்றி கண்டுள்ளார்.

அவருடைய தங்கக் குரல், தங்கக் கம்பி போல் வளைந்து, குழைந்து, நெளிந்து இசை ஆபரணமாகப் பொலிவு பெறுகிறது.

''ருசி கண்ட பூனை'' என்ற படத்தில் ஐந்து வயதுக் குழந்தைக் குரலில் 'கண்ணா நீ எங்கே?' என்ற பாடலைப் பாடியதும் ஜானகியின் குரல்தான்.

'போடா போடா பொக்கை வாயா' என்று கிழவியின் குரலில் பாடியதும் அதே ஜானகி தான்.

'மம்மி பேர் மாரி' என்று விடலைப் பையன் குரலில் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தில் பாடிய சாதனையும் ஜானகியுடையதுதான்.

இப்படியான சாதனைகள் புரிந்துள்ள ஜானகியிடம், உங்களுக்கு மூன்றாவது முறையும் ஜனாதிபதி விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் இப்படிச் சொல்கிறார்:

'உண்மையில் நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏற்கனவே தென்னிந்திய மொழிப் படங்களுக்காகச் சிறந்த பாடகி விருது கிடைத்து விட்டபடியால், வடக்கே வேறு யாருக்காவது தான் விருது கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனால் இளையராஜாவின் அற்புதமான இசை ராசியும் எனது அதிஷ்டமும் சேர்ந்து தான் எனக்கு இந்தப் பரிசைக் கொடுத்துள்ளன என்றே கருதுகிறேன்.

ஏற்கனவே 'பதினாறு வயதினிலே' படத்திற்காக தமிழிலும், 'ஓப்போல்' படத்திற்காக மலையாளத்திலும் ஜனாதிபதி விருதுகள் கிடைத்த போதிலும், என் தாய்மொழியான தெலுங்கில் 'சிடாரா' என்ற படத்தில் பாடியதற்காக கடந்த வருடம் தான் விருது கிடைத்தது என்றார்.

தினசரி சினிமா

## வயது முதிர்ந்தவர் மரணம்

டோக்கியோ, பெப் 23

உலகில் வயது முதிர்ந்தவர் பெப்ரவரி 21 இல் மரணமானார் என்று செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

கின்னஸ் புத்தகத்தின் படி ஜப்பான் வாசியான சிக்கியோ இஸூமி உலகில் வயது கூடிய மனிதர். 120 வயது வரை இவர் வாழ்ந்து வந்தார்.

# மார்க்கோஸ் எதிர்ப்பு மணிலாவில் தீவிரம்

### பாதுகாப்பு அமைச்சரும் படைத்தளபதியும் திருமதி அக்கியூனோவுக்கு தீவிர ஆதரவு

மணிலா, பெப். 23

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸைப் பதவியிறக்குவதற்கான நடவடிக்கைகள் மணிலாவில் தீவிரமடைந்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சர் என்ட்றேலியும் ஆயுதப்படைத் தளபதி பிடல் றமோஸும் திருமதி கொருசன் அக்கியூனோவை ஆதரித்து மார்க்கோஸை எச்சரித்துள்ளனர்.

உடனடியாகப் பதவியிலிருந்து இறங்கவேண்டும் திருமதி அக்கியூனோ ஜனாதிபதியாக வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இல்லையெனில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர்கள் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களை மார்க்கோஸ் சதிகாரர்கள், துரோகிகள் என திட்டித் தீர்த்துள்ளார்.

இந்த மார்க்கோஸ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பிலிப்பீன்ஸிலுள்ள பிஷப் கார்டினல் சின் போன்ற கிறிஸ்தவ மதத் தலைவர்களும் மக்கள் இயக்க தலைவர்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

கடைசிவரை மார்க்கோஸைக் காப்பாற்றக் கூடிய நாடு என நினைத்த அமெரிக்காவும் நடந்து முடிந்த பிலிப்பீன்ஸ் தேர்தல் ஒரு மோசடி என தெரிவித்து உதவிகளை நிறுத்தப்போவதாக எச்சரித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தனக்கெதிராக சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கொலை செய்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டதாகவும் மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் தொலைக்காட்சியில் தோன்றி தெரிவித்ததாக செய்திகள் தெரிவித்தன.

தொலைக்காட்சியில் தோன்றியபோது இளைத்து சோர்வடைந்த நிலையில் மார்க்கோஸ் காணப்பட்டதாகவும் அந்த செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமது மகனே கொலைச் சதி முயற்சியைக் கண்டுபிடித்ததாக மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

மார்க்கோஸின் மாளிகையைச்சுற்றி டாங்கிகளும் கவசவாகனங்களும் கொண்ட படை காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தான் கைது செய்யப்படலாம் என்ற சந்தேகத்தைத் தொடர்ந்து திருமதி அக்கியூனோ தலைமறைவாகி விட்டார்.

திருமதி அக்கியூனோ பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் தனக்கே வெற்றியெனவும் தானே ஜனாதிபதியெனவும் கூறி மார்க்கோஸ் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியிருந்ததும் தெரிந்ததே.

## லிமாவில் குண்டுவீச்சு

### பாரத தூதரகம் உட்பட பல தூதரகங்கள் பாதிப்பு

லிமா, பெப் 23

பேரு நாட்டின் தலைநகரான லிமாவில் இடம்பெற்ற குண்டு வீச்சில் பல கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

பாரத தூதரகம் உட்பட 15க்கு மேற்பட்ட தூதரகங்கள் மீது இலக்கு வைத்து இந்தக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வாகனங்களில் சென்ற கிளர்ச்சியாளர்கள் இந்தக் கட்டடங்கள் மீது குண்டுகளைக் குறிபார்த்து எறிந்து சென்றதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தால் அந்த கட்டடங்கள் சேதமடைந்ததாகவும் அங்கிருந்தவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மேலும் நம்பப்படுகிறது.

## சலஞ்சர் விபத்துக் காரணம்

கேப்கனவால், பெப் 23

அண்மையில் விண்வெளியில் வெடித்துச் சிதறிய சலஞ்ஜர் கலத்தின் விபத்துக்குரிய காரணம் மேலும் வலுவடைந்துள்ளது.

விண்கலத்தின் இரு கரைகளிலும் பொருத்தப்பட்டிருந்த 'பூஸ்டர்' ஏவுகணைகளில் ஏற்பட்ட கோளாறே இதற்கான காரணமென நம்பப்படுகிறது.

கடலடிப் படுக்கைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இதன் சிதைவுகள் இதை மேலும் உறுதி செய்வதாக அமெரிக்க விண்வெளி நிறுவனம் நம்புகிறது.

தென் லெபனானில்

## இஸ்ரவேல் துருப்புகள் பின் வாங்கல்

### இஸ்லாமியக் குழுவின் தீவிர எதிரடி காரணம்

பெய்ரூட், பெப் 23

தென் லெபனானில் கடத்திச் செல்லப்பட்ட தனது இஸ்ரவேலிய துருப்புகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட இஸ்ரவேல் இப்பொழுது அங்கிருந்து பின்வாங்கி உள்ளதாகத் தெரிகிறது.

தென் லெபனானில் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்திய போது லெபனானில் பல இடங்களிலும் பலத்த எதிரடிகளுக்கு இலக்காகியதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

தென் லெபனானிலிருந்து இஸ்ரவேல் படைகள் மெல்ல வாபஸ் ஆகத் தொடங்கியுள்ளதாகவும் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரவேலின் தேடுதல் நடவடிக்கையை நிறுத்துவதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு கடந்து விட்டதால் கடத்தப்பட்ட இஸ்ரவேலியத் துருப்புகளில் ஒருவரைக் கொன்று விட்டதாக தீவிரவாத இஸ்லாமியக் குழு ஏற்கனவே தரிவித்திருந்தது.

தென் லெபனானிலிருந்து இஸ்ரவேல் துருப்புகள் வாபஸ் ஆகவேண்டும் என்பதே இக்குழுவின் கோரிக்கையாகும்.

## மரண தண்டனை

பீக்கிங், பெப். 23

சீன கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இருவரின் ஆண் மக்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கற்பழிப்பு குற்றத்தில் இவர்கள் ஈடுபட்டதற்காகவே இத் தண்டனை கொடுக்கப்பட்டதாக 'பீப்பிள்ஸ்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வெளி உலகில்

## பாரத கரைகளில் நீர்வழிப் பயணம்

### அபிவிருத்தி செய்யப்படும் என போக்குவரத்து அமைச்சர் உறுதி

புதுடில்லி, பெப் 23

பாரதத்தின் நீர்வழிப் போக்குவரத்துத் துறை விஸ்தரிக்கப்படும்.

கொச்சினில் நடந்த கூட்டமொன்றில் வைத்து பாரத போக்குவரத்துத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு பேசுகையில்; போக்குவரத்துத் துறையிலுள்ள நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் நீர்வழிப்பயணத்தை விருத்தியடையச் செய்வதற்குமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

படகுகளிலும் கப்பல்களிலும் பாரதத்தின் கரையோரப்பயணங்களை மேற்கொள்ள வசதியாக நீர்வழிப்பயண சேவைகள் நடத்தப்படும் என்றார்.

## தென் ஆபிரிக்கா நிதி விடயம்

லண்டன், பெப் 23

தென் ஆபிரிக்காவின் நிதி ஆலோசனைகளை நிராகரிக்குமாறு இதற்கெதிரான நாடுகள் பலவும் சர்வதேச வங்கிகளைக் கேட்டுக் கொண்டுள்ளன.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## ஊறணி மரணம் கொலை என தீர்ப்பு

காங்கேசன்துறை, பெப் 24

ஊறணியில் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானவரின் மரணம் கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபவனியாக வந்த இராணுவத்தினர் ஊறணியில் வீடொன்றில் இருந்த ரயில்வே ''லைன்ஸ்மன்'' கணபதி முத்தன் (54 வயது) என்பவரை துப்பாக்கியால் சுட்டதை அடுத்து அவர் மரணமானார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதியின் பணிப்பின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். சித்திரவேல் இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மைத்துனர் நாகமுத்து சின்னராசா சாட்சியமளிக்கையில், இறந்தவர் இராணுவம் வருவதை அறிந்து வீட்டில் பயந்துகொண்டிருந்தார் எனவும் அச்சமயம் அங்கு வந்த இராணுவத்தினர் சுட்டதை அடுத்து அவர் இரத்தம் பெருகவிழ்ந்தார் எனவும் கூறினார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ். கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார்.

இறந்தவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. முக்கிய இரத்த நரம்புகள் சேதமடைந்திருந்தன. இரத்தப் பெருக்கால் மரணம் சம்பவித்தது என்றார் அவர்.

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ரூ. 20,000 நிதி உதவி

நல்லூர், பெப். 24

வடமாகாண தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சமாஜம். விபத்துக்குள்ளாகி மரணமாகும் தொழிலாளர்களுக்கும் எதிர்காலத்தில் தொழில் ஏதும் செய்யமுடியாது நிரந்தரமாகப் பாதிப்புக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கும் இருபதினாயிரம் ரூபாவரை நிதி உதவி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான பல திட்டங்களை சமாஜச் செயலாளர் திரு. க நடராசா அறிமுகப்படுத்தி உள்ளார்.

நவா மினி
(உஷா மினி முன்பாக)
248/5. K. K. S. Rd. யாழ்நகர்.



## தேசியக்கொடி ஏறாதது குறித்து அனில்

கொழும்பு,பெப்.24

வடபகுதி தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. சுதந்திர தினம் அன்று ஆண்டு தோறும் ஏறிய தேசியக் கொடி, இந்த ஆண்டு ஏற்றப்படவில்லை.

இப்படி மத்துகம எம். பி. திரு. அனில் முனசிங்க கூறினார்.

அவசரகாலநிலைச்சட்ட விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

## கிளிநொச்சியில் புதிதாக உதவி அரச அதிபர் பிரிவு

### தற்போதுள்ளது இரண்டாகும்

கிளிநொச்சி, பெப். 24

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவினை இருபகுதிகளாகப் பிரிப்பதுடன் கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவினையும் விரைவில் இருபகுதிகளாகப் பிரிக்க உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

இது நடைமுறைக்கு வரும் போது அதிகாரிகளது வேலைப்பழு தானாகவே குறையும்.

இவ்வாறு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராகவிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு எஸ் பாலரட்ணம் அவர்களின் பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என் ஜெயநாதன் தமது உரையில் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் கே. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இப்பிரியாவிடை வைபவத்தில் அரசாங்க அதிபர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது

முன்பு இலங்கையின் பல இடங்களிலும் வன்செயல்கள் தலைதூக்கிய போதும் கிளிநொச்சி ஓர் அமைதியான பகுதியாக இருந்தது. வந்தோரை வரவேற்று ஓர் அடைக்கல பூமியாகத் திகழ்ந்தது.

இன்று இந்த அடைக்கால பூமியேபல இன்னல்களுக்கு ட் படுத்தப்பட்டு மயான பூமியாகக் காட்சியளிக்கின்றது.

இக்கால கட்டத்தில் அரச அதிகாரிகளும் ஊழியர்களும் பொறுப்புணர்ச்சியுடனும் கடமை கண்ணியம், கட்டுப்பாடு தவறாது ஒழுகுதல் வேண்டும். இந்த வகையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் சிறந்த உதாரணமாக விளங்கினார்.

இந்த வைபவத்தில் கிளிநொச்சிக் கச்சேரி மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கம் மேலதிக அரசாங்க அதிபர் காணிப்பிரிவு திரு. எம். முருகவேள் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியம் உட்பட கிளிநொச்சிக் கச்சேரி உத்தியோகத்தர் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## இஸ்ரவேல் பிரதிநிதியும் கலந்துகொண்டார்

கொழும்பு, பெப், 24

பெப்ரவரி 4 ஆம் திகதி நடந்த உத்தியோக பூர்வமான சுதந்திரக் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு இஸ்ரவேல் நாட்டுப் பிரதிநிதி அழைக்கப்பட்டு இருந்தார்

இத்தகவலை உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

கொழும்பு 3 ஆவது எம். பி. ஜனாப் ஹலீம் இஷாக்கின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

இதுவரை காலமும் சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு இஸ்ரவேல் பிரதிநிதி அழைக்கப்படவில்லை. இம்முறை அரசின் கோரிக்கைக்கு இணங்க இஸ்ரவேல் பிரதிநிதி அழைக்கப்பட்டார்

எல்லா நாட்டுத் தூதர்களுக்கும் உரிய அந்தஸ்து அவருக்கு வழங்கப்படவில்லை. அவருக்கு பிரத்தியேகமாக ஆசன வசதி செய்து கொடுக்கப்பட்டது.

இப்படி அமைச்சர் சொன்னார்.

## வெளிமண்டபம்

ஊர்காவற்றுறை, பெப் 24

புளியங்கூடல் மகாமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு புதிய வெளி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இருந்த வெளிமண்டபம் உடைக்கப்பட்டு தற்போது புதிய அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

## இளம் பெண் மரணம்

சாவகச்சேரி, பெப் 24

நுணாவில் மேற்கில் 16 வயது இளம் பெண் ஒருவர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

தொலைக்காட்சிப் படம் பார்க்கச் சென்றதற்காக தகப்பனார் ஏசியதால் ஏற்பட்ட மன விரக்தியே காரணமாகும் எனக் கூறப்படுகிறது.

## குச்சவெளி தாக்குதல்

திருகோணமலை, பெப்.24

குச்சவெளி பொலீஸ் நிலையத்தைப் போராளிகள் தாக்க எடுத்துக் கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

விமானம் மூலம் அப்பகுதியில் இரண்டு தினங்களாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## முகமூடி தொல்லை ஆஸ்பத்திரியிலும்

மட்டக்களப்பு, பெப். 24

முகமூடி நபரின் தலையாட்டம் இரண்டாவது தடவையாக சனியன்றும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இடம் பெற்றது.

இதனால் 11 ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்த கல்லடி—நொச்சிமுனை வாசியான மகாலிங்கம் (வயது 28) ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டார்

இந்த நபர் காலில் கலப்பை குத்திய காயத்துக்குச் சிகிச்சை பெற்று வந்தார்.

### 2 சடலங்கள்

திருகோணமலை, பெப். 24

கட்டைபறிச்சான் கிராமத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஒன்று, ஆணின் சடலம். 75 வயதான கே. சபாரத்தினம் என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

இரண்டாவது, பெண்ணின் சடலம். 42 வயதான துரைசிங்கம் பரமேஸ்வரியினுடையது என்று அடையாளம் காணப்பட்டது.

## பாதுகாப்பு வலயம் பலப்படுத்தப்படும்

### அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

பாதுகாப்பு வலயம் பலப்படுத்தப்படும்.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அறிவித்தார்.

பன்னல மகாபொல வைபவத்தில் ஞானதர்சன கருத்தரங்கில் பேசுகையில் திரு. அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது:-

தீவிரவாதத்தை ஒழிக்க ஆயுதப்படையினர் பலப்படுத்தப்படவேண்டும்.

இந்தியாவின் நட்புறவை நாம் பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் ஆதரவையும் நாம் பெறவேண்டும்.

சர்வதேச தொடர்பு சாதனம் முதலியவற்றை எமக்குச் சாதகமாக மாற்ற வேண்டும்.

ஐக்கிய இலங்கை என்ற அமைப்பின் கீழ் தான் அதிகாரப்பரவலாக்கலை அமுல் நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இப்படி அமைச்சர் சொன்னார்.


### பிறந்த நாள் வாழ்த்து

செல்வி. அனுப்பிரியா

சாவகச்சேரி ரகு-சுதா தம்பதியின் புதல்வி 'அனுப்பிரியா' இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். வாழ்த்துவோர்: அம்மா, அப்பா, சுதன், பிரியா.

### மணமகள் தேவை

யாழிந்து உயர்குல வியாபாரத்தில் சிறந்த வருமானமுள்ள 35 வயது பிரமச்சாரிக்கு அழகான கையெழுத்தும் குறையற்ற தோற்றமும் 28 வயதுக்குட்பட்ட மணமகள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். முழு விபரமும் முழு உருவ புகைப்படம் ஜாதகமில்லாத கடிதங்களும் சீதனமும் சாதி மதமும் கல்வியறிவும் கண்டிப்பாகக் கவனிக்கப்பட மாட்டாது. பிறப்பெண் அல்லது கூட்டெண் ஏழு விரும்பத்தக்கது. விளம்பர இலக்கம்: 8, உதயன் மே.பா., 15, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

### பயிற்சி

கடவுச்சீட்டுள்ள இருபாலாருக்கும் தெரிவு செய்யும் தொழிலுக்கேற்ற அரபுமொழி பேச்சுப் பயிற்சியுடன் சகலதும் இலவசம். மொத்தமாக எழுபத்தைந்து வெற்றிடங்கள் சகல தொழில்களுக்கும் உண்டு. கல்வி, அனுபவ விபரத்துடன் சுயவிலாசமிட்ட முத்திரையுறையுடனும் ஐந்து தினங்களுக்குள் தாமதத்தை தவிர்க்க யாழ்ப்பாண தபால் பகுதியில் விண்ணப்பத்தை அனுப்பவும். விளம்பர இலக்கம்: 9, உதயன் மே பா., 15, 2ஆவது ஒழுங்கை,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்த நல்லறிவு வேண்டும்;

- மகாகவி பாரதியார் -

உதயன்
உண்மை நேர்மை - ஒரு நிலைமை
இல 16, கேத ஒழுங்கை, தொலைபேசி: 24805
திருநெல்வேலி 22073
யாழ்ப்பாணம் 24-02-86

# பொலிஸ் சூட்டால் பிதா பஸ்தியன் மரணம்

## அவரின் உடல் எங்கே?

### அமெரிக்கா அறிக்கையில் விசனம்

உலக நாடுகளில் 1985 இல் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் பற்றி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை ஒன்றை அமெரிக்க செனட், உபகுழுக்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் ஏனைய நாடுகளிலும் பார்க்க, இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

அறிக்கையின் அதிக பக்கங்கள் இலங்கைக்குத் தான் ஒதுக்கப்பட்டன.

அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு;

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழரின் பரம்பரைப் பிரதேசம்.

அப்பகுதிகளில் இனப் பிரச்சினை காரணமாக திட்டமிடப்பட்ட அரசியல் வன்செயல்கள் 1985 இல் மீண்டும் அதிகரித்தன.

பல தமிழ் இளைஞர்கள் வீடுகளில் இருந்து காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 180 தமிழ் இளைஞர்கள் காணாமற் போய் விட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது.

இவர்களில் சிலரை மட்டுமே பொலீஸ் நிலையங்கள், இராணுவத் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தால், அவர்கள் கைது செய்யப்படவில்லை அல்லது விடுவிக்கப்பட்டு விட்டார்கள் அல்லது பயிற்சி பெற நாட்டை விட்டு வெளியேறி விட்டார்கள் அல்லது தப்பி ஓட முயற்சிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பதில் தெரிவிக்கப் படுகிறதாம்.

காணாமற்போன தமிழர்களில் முக்கியமானவர் வண. பிதா மேரி பஸ்தியன். 1985 இல் இச்சம்பவம் நடந்தது மன்னாரைச் சேர்ந்த தமிழ் மதகுரு வண. பிதா பஸ்தியன்.

தமிழ் போராளிகள் மீது பொலீசார் சுட்டதில் வண. பிதா. பஸ்தியனும் மரணமானார் 1985 ஜனவரியில் இச் சம்பவம் இடம் பெற்றது

அவரின் உடல் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதுகாப்புப் படையினர்தான் இவரைக் கொன்றனர் என்பதற்கான சாட்சியங்களைக் கண்டு பிடிப்பதில் அரசு தோல்வி கண்டது

> இலங்கையில் மனித உரிமை அத்துமீறல்கள் பற்றி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை ஒன்றை அமெரிக்க செனட்டுக்கு சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் இன்று பிரசுரமாகின்றன.

முந்திய ஆண்டுகளைப் போன்று பதற்ற நிலைக்கான முக்கிய காரணம் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளே

பாதுகாப்புப் படையில் முன்னர் கணிசமான அளவு தமிழர் இருந்தனர் 1984 இல் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி தமிழராக இருந்தார்.

1985 இல் பொலீஸ் படையில் 5 சத வீதத்துக்கு அதிகமாக தமிழர் இல்லை

இராணுவ மற்றும் ஆயுதப்படைகளில் 100க்கு 100 சிங்களவர்களே உள்ளனர்

பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதலின் போது குடிமக்கள் மீது கண்டபடி தாக்குவதுதான் பெரும் பிரச்சினையாக உள்ளது

சில சம்பவங்களில் பாதுகாப்புப் படைகள் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டமை வெளியாகியது.

போதுமான சாட்சியங்கள் இல்லாத படியால் தவறு விட்ட பாதுகாப்புப் படையினர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது இருப்பதாக அரசாங்கம் கூறுகிறது

தடுப்புக் காவலில் இருப்பவர்கள் சித்திரவதை, இம்சைகளுக்குள்ளாவதாக முறைப்பாடுகள் தொடர்ச்சியாக வந்துதுள்ளன.

இந்நடவடிக்கைகளினால் பாதிக்கப் பட்டவர்கள் சமர்ப்பித்த சத்தியக் கடதாசிகளை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கிறது. துன்புறுத்தலுக்கு உள்ளானவர்களைப் பரிசோதனை செய்த டாக்டர்களின் சத்தியக் கடதாசிகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 1983 இல் நடைமுறைக்கு வந்தது.

அதன் பின்னர் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

1985 நடுப்பகுதிவரை மூன்று வழக்குகள்தான் அச்சட்டத்தின்கீழ் விசாரிக்கப்பட்டன

இனப்பிரச்சினை குறித்து அரசியல் கூட்டங்களை நடத்த அனுமதிப்பதில் முரண்பாடுகளும் பாரபட்சமும் காட்டப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும் என்று ஒரு குழு கூறியது 1985இல் அந்தக்குழு பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த அனுமதி கேட்டது. ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. பல முறை அனுமதி கோரியும் வழங்கப்படவில்லை.

இன்னொரு குழு அரசியல் மதத்தலைவர்களைக் கொண்டது.

தமிழருடன் பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவதை அக்குழு எதிர்த்தது. பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த அந்தக் குழு அனுமதி கோரியது. உடனே அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் போடப்பட்ட பாதுகாப்பு வலயம், வடபகுதிக் கரையோரத்தில் போடப்பட்ட 320கிலோ மீற்றர் கண்காணிப்பு வலயம் ஆகியன மக்களின் சுதந்திர நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

இதனால் பெரும்பாலான மீனவர்களால் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

மகாவலி அபிவிருத்திக் குடியேற்றத் திட்டத்தில் காணிப் பங்கீடு தமிழருக்கு பாதகமான முறையில் நடைபெறுவதாக முறையிடப் பட்டுள்ளது.

பாரம்பரியமாக இருந்துவந்த இனவிகிதாசாரத்தை இந்தக்காணிப் பங்கீட்டு முறை மாற்றி அமைக்கின்றது என்று தமிழர் ஆட்சேபிக்கின்றனர்.

இதனால் தமிழ் போராளிகள் மகாவலித் திட்டத்தின் சில பகுதிகளில் வாழும் சிங்களக் குடியேறக்காரர்களைத் தாக்கியுள்ளனர்.

இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பொய்யாமொழி**



குறள்:

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

பொருள்:

நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மன மகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.

**அக்கரைப்பற்றில் நடந்த வெறியாட்டம்**

கிழக்கில் அக்கரைப்பற்று, தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் நடந்த கொடூரம் நினைத்துப் பார்க்க முடியாத பயங்கரம்.

சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்ற மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவினர் பெற்ற தகவல்கள் தவறாக இருக்கும் எனக் கருத இடமில்லை.

சம்பந்தப்பட்ட ஊர்வாசிகளே அந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கின்றனர். என்னே கொடூரம், கொடுமை!... நெகிழாத நெஞ்சும் இரத்த நீர் வடிக்கக்கூடிய காட்டுமிராண்டித்தனமான அட்டூழியம் அது. அந்த வெறியாட்டம் எல்லோராலும் கண்டிக்கப்பட வேண்டியது

வயலில் வேலை செய்த ஏழை விவசாயிகள் தமது நான்கு ஐந்து மாத உழைப்பின் பலனைப் பெறுவதற்காக, அறுவடை செய்த நெல்லை சூடு மிதித்துக் கொண்டிருந்தவர்கள். அவர்களை வரிசையாக நிற்கச் செய்து, நான்கு பிரேதங்களைத் தூக்கிப் பிடிக்குமாறு கூறிவிட்டு சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள் சீருடை அணிந்த சில மிருகங்கள்

காட்டில் வாழும் கொடிய மிருகங்கள் கூட ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கில் உயிர்களைக் கொன்று குவிக்கமாட்டா. இரத்த வெறிபிடித்த சீருடைக் கூட்டம், வயல் வேலை செய்த அப்பாவிகளை, நிராயுதபாணிகளை ஒரு சில நிமிட நேரத்தில் கொன்று குவித்தது. அத்தோடு அந்த அரக்கப் பிறவிகளின் வெறி தீரவில்லை. சடலங்களை வைக்கோல் மீது போட்டு டீசல் ஊற்றி எரித்ததாகச் சொல்லப் படுகிறது.

சம்பவத்தை நேரில் பார்க்கச் சென்றவர்கள் மண்டை ஓடுகளின் குவியல்களைத் தான் காணமுடிந்ததாம்.

இப்படி ஒரு அக்கிரம, அநியாயம் அண்மைக் காலத்தில் நடந்ததில்லை. இந்த விஷயத்தை எல்லா நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும். தமிழர்கள் இன அழிப்பு வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறுவதற்கு இது ஓர் அத்தாட்சி.

இந்த அக்கிரமத்தை அறிந்து கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருக்கின்றன. அந்த ஒன்றே இந்த அநியாய சம்பவத்தின் கொடூரத்தை விளக்கப் போதுமானது. அல்லவா?

உண்மை சாவதில்லை இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று கூறி இம்முறை அரசு தப்ப இடம் கொடுக்கக்கூடாது.

மட்டக்களப்பு, அம்பாறை, அக்கரைப்பற்றுப் பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதிக்கு தந்தி அடித்தால் மட்டும் போதாது. திட்டமிட்டது போலவே மாபெரும் எதிர்ப்பு – கண்டன இயக்கம் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த இயக்கத்தில் வடக்கில், கிழக்கில், மலையகத்தில் – தமிழர் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் உள்ள சகல பிரஜைகள் குழுக்களும் பங்குபற்ற வேண்டும். சமூக, சமய, சங்கங்கள் யாவும் பங்குபற்ற வேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் பரந்த அளவில் எதிர்ப்பு இயக்கத்தை நடத்த வேண்டும். தமிழ் மக்கள் எல்லோரும் ஒரே குரலில் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துத் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும். அதனை வெளி உலகம் அறிய வேண்டும். பாரபட்சமில்லாத விசாரணை ஒன்றை நடத்தும் அளவுக்கு வெளிநாடுகளை நிர்ப்பந்திக்கும் அளவுக்கு எதிர்ப்பு இயக்கம் பலம் உள்ளதாக இருக்க வேண்டும்.

சீருடையில் வந்து அட்டூழியம் புரிந்த காட்டுமிராண்டிகள் யார்? அதற்குப் பின்னணியில் நின்றவர்கள் யார்? என்பன வெளிக்கொணரப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களும், மாவட்ட அமைச்சர்களும் வயலில் வேலை செய்தவர்களை பயங்கரவாதிகள் என்று ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறார்களா? அல்லது பாரபட்சமில்லாத விசாரணை ஒன்றை நடத்தத் தூண்டு கோலாக இருக்கப் போகிறார்களா? அதனைச் செய்ய முடியவில்லை என்றால் அவர்கள் ரோஷமில்லாத தமிழர்கள் ஆகி விடுவர். இவ்விஷயத்தில் பூரண பகிரங்க விசாரணை நடத்த அரசாங்கம் முன்வராவிடில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அத்தனை கிழக்கு மாகாணப் "பந்தங்களும்" தமது பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு வர வேண்டாமா?

கடந்த வாரம் அக்கரைப்பற்றில் நடந்தது, மட்டக்களப்பில், கல்குடாவில், நுவரெலியாவில் நடக்கமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அரசியல் வாதிகளுக்கு, கதிரை கிடைத்தால் போதும். அதில் ஏறி அமர்ந்த பின்னர் மக்களைப் பற்றிய அக்கறை அருகி விடுவது இயல்பு.

அவர்களை விட்டு விடுவோம்!

வடக்கு, கிழக்கில் உள்ள அத்தனை தமிழரும் ஒன்று சேர்ந்து தெரிவிக்கும் எதிர்ப்புக் குரல், பகிரங்க விசாரணைக்கு மட்டுமல்ல சர்வதேச மட்ட விசாரணைக்கு நிர்ப்பந்திக்கும் வகையில் இருக்கவேண்டும்.

சமாதானத்தையும் அமைதியையும் விரும்பும் தமிழ் மக்கள் — சட்டத்துக்கு உட்பட்டு, வாழ விரும்பும் தமிழ் மக்கள் — செய்யக்கூடியது இந்த எதிர்ப்பு இயக்கம் ஒன்று மட்டுமே.

காகிதத்தையும், மையையும், தட்டச்சு நிபுணியும் விரயம் செய்து கொழும்புக்கு மகஜர்கள் அனுப்புவதால் கிடைக்கப் போவது எதுவுமில்லை.

# கஷ்டங்களைக் களைய வைக்கும் தேவி உபாசனை

## தெல்லிப்பளையில் துர்க்காதேவிக்கு மாசிமக இலட்சார்ச்சனை

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை)

பிரார்த்தனையே எம்மைத் தூக்கிவிட வல்ல சக்தி வாய்ந்தது. இன்றைய அல்லற் பாடுகளிலிருந்து எம்மை விடுவிக்க வல்ல சக்தி பிரார்த்தனைக்கேயுண்டு. உள்ளச் சுமையையும் குமுறலையும் இறக்க வல்லது இது.

இறைவன் திருவருளை நோக்கி எமதுள்ளத்தைத் திருப்ப வேண்டிய காலம் இது. சுற்றிவளைத்துக் கொண்டு நிற்கும் இடர்ப்பாடுகளின் மத்தியில் நெருக்குண்டு இடைக்கிறோம்.

"துர்க்கா சரணம்
தாயே சரணம்
அம்மா சரணம்
ஆத்தாள் சரணம்
அன்னையே சரணம்"

என்று பாடிப்பாடி சரண் புக வேண்டிய இந்த நேரத்தில் தேவியின் ஆயிரம் நாமங்களையும் காலையும் மாலையும் கேட்பதும் ஜெபிப்பதும் தியானிப்பதும் எம்மை அமைதி வழிக்கு இழுத்துச் செல்கிறது

தேவியின் நாமங்களால் துளைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது செவிகளில் குண்டுச் சத்தமும் வேட்டுச் சத்தமும் புக முடியாமல் பின்வாங்குகிறது.

பிரார்த்தனை செய்வதன் நோக்கம் மிகஉயர்ந்ததாக அமையும் போது தான் அம்பாள் கருணை பாலிப்பாள்.

எமது நாடு, எமது இனம், எமது மொழி, எமது மதம் என்று அபிமானத்தோடு சிந்திப்பவன்தான் மனிதன்; அவன்தான் பிறவியெடுத்த உரிமையைப் பெறுகிறான். வீட்டைக் கட்டிக் காப்பது போல் நாட்டைக் கட்டிக் காக்கும் பொறுப்பும் பிறந்த பொன்னாட்டை நேசிக்கும் சிறப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

ஆகவே, எம்மால் இயன்ற வழியில் இப் பணியை நிறைவேற்ற வேண்டும்.

கோயிலை மையமாக வைத்து வாழ்பவர்கள் இன்றைய சூழ்நிலையில் வேடிக்கைகள் விளையாட்டுகளை விட்டு முழுநேரப் பிரார்த்தனையும் தான தரும நிகழ்ச்சிகளும் நிகழக் கூடிய ஒழுங்குகளை மேற்கொள்வது அவசியமாகும்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்"

[illegible] போதாது. இதனை நடைமுறையிற் செய்து காட்டவும் வேண்டும்

கோயிலுக்கு வரும் ஒவ்வொருவரையும் அமைதியாக இருந்து எம்மினத்தின் சுபீட்ச வாழ்வுக்காகப் பிரார்த்திக்கப்பழக்க வேண்டும்.

இந்தவகையில் இன்று எமது ஆலயத்தில் நடைபெறுகிற இலட்சார்ச்சனை மிகமிக அவசியமாகக் கருதப்படுகிறது.

தியானத்தோடு ஆரம்பமாகும் அர்ச்சனை நிகழ்ச்சி அக்னி ஹோமத்தோடு தினமும் காலையும் மாலையும் நிறைவு பெற்று ஆயிரமாயிரம் அடியவர்களின் உள்ளக் குமுறலை மாற்றி விடுகிறது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

> தெல்லிப்பளை துர்க்கா புரம் அருள் மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மாசிமாத இலட்சார்ச்சனையின் ஓர் அங்கமாக இன்று ஆலயத்தில் மாசிமக விசேஷ உற்சவம் நடைபெறுகிறது இதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

தேவி உபாசனைக்கு ஏற்றவை நாம ஸ்தோத்திரங்களும் நாமாவளிகளுமாகும். இவற்றில் நாமாவளி படித்துப் பாராயணம் [illegible] மலரோ, பத்திரமோ [illegible] சுவர்ண புஷ்பம் சமர்ப்பித்து அர்ச்சிப்பதற்கு உரியதுமாகும்.

பத்துவித சகஸ்ரநாமங்களில் சிறந்தது லலிதா சகஸ்ர நாமமாகும் என்பது ஞானிகளின் அனுபவம் ஆயிர நாமங்களில முதல் நாமமாக அமைந்தது" ஸ்ரீ மாதா" என்பது.

ஆம்; துன்பம் வரும் போது எம்மையறியாமல் வாயில்இருந்து வெளிவருவது "அம்மா" என்ற வார்த்தைதான். அபிராமிபட்டரும் இதனை அழகாக வெளிப்படுத்தினார். அதாவது "துன்பங்கள் சூழ்ந்து வரும் போது உன்னைத்தான் "அன்னையே" என்று அழைப்பேன். நீ ஓடி வந்து காப்பாற்ற வேண்டும்" என்று பாடினார். தாயை முதலில் நினைப்பதும் வணங்குவதும் கோடி புண்ணியமாகும். சேயின் நன்மைக்காகத் தன் சுகமத்தனைதையும் துறப்பவள் தாய். அந்தத் தாயை விடச் சிறப்புமிக்க இந்தத் தாய் தோன்றாத் துணையாக நின்று பிறவிகள் தோறும் மாறாத மாதாவாக நின்று தன்னிஷ்டப் படி காத்து வாழ வைக்கிறாள்.

ஸ்ரீ என்பது மங்களமான சிறப்பு மிக்கவள் என்பதை உணர்த்துகிறது. அத்துடன் அறம், பொருள், இன்பம், வீடு, செல்வம், பெருமை, அழகு, அலங்காரம், கல்வி அனைத்தையும் வழங்கும் ஆதிபராசக்தி அவளே யென்பதையும் ஸ்ரீ மாதா என்ற முதல் நாமம் விளக்குகிறது.

இப்படியாக ஆயிரம் நாமங்களும் ஆயிரம் அர்த்தங்களை விளக்கி அன்னையையும் அடியவர்களையும் இணைத்து விடுகிறது.

அடுத்து இந்த நாட்களில் நடைபெறும் அக்னி ஹோமத்தின் மகிமையைக் கவனிப்போம்.

ஸ்ரீ சூக்தத்தின் முதலாவது மந்திரப் பொருள் பின்வருமாறு: "பொன் நிறம் வாய்ந்தவளும் சகல பாவங்களை நீக்குபவளும் பொன் மாலையும் வெள்ளி மாலையும்" அணிந்திருப்பவளும் சந்திரன் போல் மகிழ்ச்சி தருபவளும் மக்களுக்காக ஏராளமான ஐஸ்வரியத்தை வைத்திருப்பவளுமான மகாலட்சுமியை, ஓ! அக்கினிபகவானே, என்னுடைய நன்மையின் பொருட்டு அழைத்து வாரும் என்று அமைந்துள்ளது.

இச் சுலோகத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும் போது அந்தத் தேவி அக்னி குண்டத்தில் தோன்றி அனைத்தையும் நல்குவாள் என்ற நம்பிக்கை பிறக்கிறது

அன்னையின் கருணை மழையில் தோய வேண்டும்: எம்மை சூழ்ந்திருக்கும் வெப்புகளனைத்தும் நீங்க வேண்டும் என்ற புனித நோக்கத்தோடு நடைபெறும் இவ்வைபவம் எமது இனத்துக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

**ஆரம்ப சுகாதார கண்காணிப்பு**

சாவகச்சேரி, பெப் 24

சாவகச்சேரி நகராட்சி மன்ற பத்தாம் வட்டாரத்தில் ஆரம்ப சுகாதார கண்காணிப்பு நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

நகராட்சிமன்ற சுகாதார பரிசோதகர் திரு. செ. செல்வபாஸ்கரன் தலைமையில் இது இடம் பெற்றது.

**வித்தாரம்**

வா தம்பி, முரளி!

என்ன இண்டைக்கு உன்ரை உடுப்பைப் பாத்தா, நீயும் ஒரு காக்கிச் சட்டைக்காரரோ எண்டு நினைக்கத் தோன்றுதப்பா!

இந்த வெயில் வெக்கையிக்கை ஏன் உதைப் போட்டனி? உடுப்பைப் போடுறதுக்கும் தமிழனுக்குச் சுதந்திரம் இல்லையோ எண்டு நீ துடங்கிறதுக்கு முன்னாலை நானே அந்த விஷயத்தை நிப்பாட்டிப் போடுறேன்.

உப்பிடி ஒரு சீருடை போட்டவை தானுமே அக்கரைப்பற்றிலை தங்கவேலாயுதபுரம் உடும்பன் குளத்தடி வயலிலை வெறியாட்டம் நடத்தியிருக்கினம்.

ஹாசிஸ் அல்லது ஹீரோயின் அடிச்சுப் போட்டுப் போய்த்தான் அவை உந்த மிருகத்தலமான வேலை செய்திருப்பினம்

அல்லாட்டா ஈவிரக்கம் இல்லாமல் வரிசையா நிறுத்தி, துடிக்கத் துடிக்கச் சுட்டுப்போட்டு, பிறகு வைக்கோலுக்குள் போட்டு எரிச்சிரிக்கினம் எண்டாப் பாரேன்.

சுயநினைவோடு நிண்டிருந்தா அப்பிடிச் செய்திருக்க மாட்டினம். தெஹிவத்தையில் நடந்ததுக்கு இது பழிக்குப் பழியும், பலிக்கும் பலியும் எண்டு தெற்குப் பக்கத்திலை பேசப்படுகிறதாம்.

இந்தக் கொடூரச் சம்பவம் பற்றி கிழக்கு மாகாணத்திலை இருந்து மக்கள் பிரதிநிதியாய் போய், கவுண்மேந்துக் கதிரையிலை இருக்கிறவைக்கு பிரஜைகள் குழு அறிவிச்சுதாம்.

அப்பிடி இருந்தும் அவை நேற்றைக்கு வரை அந்தப் பக்கமும் எட்டிப் பாக்கவில்லை தலை கூட வைச்சுப் படுக்கவில்லையாம்.

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் சம்பந்தப்பட்டவையளிலை ஒருத்தரிடம் நீங்கள் சம்பவம் நடந்த இடத்தைப் போய்ப் பார்க்கயில்லையோ, எப்ப போறியள் எண்டு கேட்ட போது "ஆறுதலாப் போவம்" எண்டு பதில் வந்ததாம்.

அந்த வெளிநாட்டுக் காரருக்கு பெரிய ஆச்சரியமாய்ப் போச்சு. தங்கடை நாட்டிலை எண்டா அரசியல் வாதியள் செய்தி அறிந்த அடுத்த நிமிஷமே "ஸ்பொட்டி" லை நிப்பினம் எண்டு சொன்னார்.

நான் என்னத்தைச் சொல்ல. அவருக்கே விளங்கிப் போச்சு. அரசாங்க அரசியல் வாதியள் எண்டா என்ன உயிர்போன விஷயமெண்டாலும் ஆறுதலாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவைக்கு இருக்கு.

அதுக்கு அடுத்தாப்போலை இன்னொரு விஷயம் அக்கரைப்பற்றிலை செத்தது பயங்கரவாதிகள் தான் எண்டு "பாழ்படுத்தும்" அமைச்சு அறிக்கை விட்டாலும் மிகப் பெரியவர் பெரிய கஷ்டத்திலையும், கோபத்திலையும் இருக்கிறாராம்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் எல்லாம் அதிர்ச்சி தெரிவித்ததைத் தொடர்ந்து அவருக்கு திக்பிரமை எண்டு கேள்வி.

உடனடியாகத் தனக்கு விவரமாக அறிக்கை தரச்சொல்லி அம்பாறைப் பகுதிக்குப் பொறுப்பான உயருயர் அதிகாரியை கேட்டிருக்கிறாராம்.

வயலிலை வேலை செய்த விவசாயிகள், தொழிலாளியள் எல்லாம் பயங்கரவாதியளோ எண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கேட்கத் தொடங்கி விட்டார்களாம்.

இனி என்ன?

இதை எப்பிடிப் பூசி மெழுகலாம் எண்டு இஸ்ரவேல் மொசாட்டிட்டை ஆலோசனை கேட்கிறதுக்கு ஆயத்தம் செய்திருப்பினம்.

இஸ்ரவேல் செய்யிற தாராள உதவிக்காகத் தானே அந்த நாட்டுப் பிரதிநிதியை இந்தமுறை சுதந்திரதின விழாவுக்கு அழைச்சவை!

கொண்டோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மீட்டல் வகுப்புக்கள்
கலே, வர்த்தகம் 86
ஆரம்பமாகிவிட்டன.
சனி, ஞாயிறு: காலே 8 மணி
DAY CLASS: காலே 8 மணி
குறிப்பிட்ட திகதிக்குப் பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது
VICKNA Tuition Centre
52, STANLEY ROAD, JAFFNA.

# உதயன்

24. 02. 1986

புதிய 4வது பிரிவு O/L
ஆரம்பம்:
3-3-86
DAY CLASS - காலே 8 மணி
EVENING CLASS - பி.ப, 2-15
5, 6, 7, 8 - பி.ப. 2-15
VICKNA Tuition Centre
52, STANLEY ROAD, JAFFNA.

★ இனப்பிரச்சினை தீர்வுக்கு

# அமெரிக்காவின் அல்லது இந்தியாவின் சமஷ்டி அரசமைப்பு

## ஜே. ஆருக்கு கென்னடி ஆலோசனை

வாஷிங்டன், பெப். 23
இனப்பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வு காண இந்திய அல்லது அமெரிக்க சமஷ்டி அரசமைப்பை நடைமுறைப் படுத்தும் படி இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடியே இந்த ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்.

திரு. ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே திரு. கென்னடி இதைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சமஷ்டி அல்லது அமெரிக்க சமஷ்டி அரசமைப்பை நடைமுறைப்படுத்தினால் ஐக்கிய இலங்கையின் கீழ் உற்சாகமான அரசியல் வாழ்க்கையை சகல மக்களுக்கும் வழங்கியதாக இருக்கும்.

தமிழ் மக்களும் இலங்கையின் தேசிய நீரோட்டத்துடன் இணைந்து உற்சாகத்துடன் பாடுபட இந்திய அல்லது அமெரிக்க சமஷ்டி அரசமைப்பு முறை உதவும்.

எப்படி இருந்தாலும் இது இலங்கை மக்களின் பிரச்சினைசமாதான தீர்வு காணப் படுவதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு] எனது பிரார்த்தனைகள்.

இப்படி செனட்டர் எட்வர்ட் கென்னடி தனது கடிதத்தில் கூறியிருக்கின்றார்.

## ஆங்கில மருந்துகளை சுதேச வைத்தியர்கள் வழங்க முடியாது

கொழும்பு, பெப். 24
சுதேச வைத்தியர்கள், ஆங்கில மருந்துகளை இனி நோயாளர்களுக்கு வழங்க முடியாது.

இதற்கான சட்டத் திருத்தம் ஒன்று எதிர் வரும் ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வர உள்ளது.

மருந்துகள் சட்டத்துக்கான திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் உள்ள சுதேச வைத்திய பிரிவில் படித்து வைத்தியர்களாக வந்தவர்கள் ஆங்கில மருந்துகளையும் நோயாளிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

சட்டத் திருத்தம் ஏப்ரலில் நடைமுறைக்கு வரும். அதன் பின்னர் அப்படிச் செய்ய முடியாது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை சுதேச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

## மாசிமக உற்சவம்

புங்குடுதீவு, பெப். 24
புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் லோக க்ஷேமத்தின் பொருட்டு சண்டிகா ஹோமமும் இலட்சார்ச்சனையும் கடந்த (15-2-86) சனிக்கிழமை முதல் நிகழ்ந்து வருகின்றது.

இன்று (24-2-86) திங்கட்கிழமை மாசிமக புண்ணிய தினத்தை முன்னிட்டு அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருவுலா இடம்பெறும்.

## தமிழ்நாட்டில் தேர்தல்

சென்னை, பெப். 23
15 ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்த தமிழ் நாட்டின் உள்ளூராட்சித் தேர்தலில் 65 சதவீத மக்கள் வாக்களித்தனர்.

நேற்று நடந்த இத் தேர்தலில் மொத்தம் 3 கோடிவாக்காளர் வாக்களிக்கத்தகுதி பெற்றிருந்தனர்.

முதன் முறையாக 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களும் இம்முறை வாக்களித்தனர்.

தேர்தல் முடிவுகள் 24 ஆம் திகதி திங்கள் மாலையில் இருந்து வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைத்தீர்வு

## ஆட்சிக்கு வந்த பின்னர் தான்

### அனுரா தெரிவிப்பாராம்

கொழும்பு, பெப், 24
இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணுவோம் என்பதை இப்பொழுது சொல்ல நாம் தயார் இல்லை. ஆட்சிக்கு வந்த பின்னர் நாம் அதனைத் தெரிவிப்போம்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு நேற்று சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடந்தது.

அங்கு பேசுகையில் திரு பண்டாரநாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

திரு பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

தமிழருக்கு மட்டும் அல்ல பிரச்சினை முஸ்லிம்களுக்கும் பிரச்சினை உண்டு.

சகலவற்றையும் தீர்க்க எல்லா இனப் பிரதிநிதிகளும் அடங்கிய தேசிய சபை இருக்க வேண்டும்.

1986க்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். இல்லை என்றால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து ஆட்சியை இறக்குவார்கள்.

இப்படி அவர் சொன்னார்.

## யாழ். நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம். பெப். 24
எதிர்வரும் வியாழக்கிழமை (27 ஆம் திகதி) யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வெகுஜன ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ளும்படி பொது மக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கிறது.

வெகுஜன கூட்டு அமைப்பு அண்ணா தி. மு. கவின் அனுசரணையுடன் இந்தப் பேரணியை நடத்துகிறது.

யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியில் ஆரம்பமாகும் இந்தப் பேரணி நகரின் பிரதான வீதிவழியாக கச்சேரி செல்லும் பின்னர் அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலடிக்கும் சென்று முடிவடையும்.

இந்தப் பேரணி தொடர்பான நடவக்கைகள் பற்றி ஆரயய்வதற்காக கடந்த சனிக்கிழமை திரு. பொன். மதிமுகராசா தலைமையில் கூட்டமைப்பின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பேரணியில் பங்குபற்றுபவர்கள் சுலோக அட்டைகளையும் கொடுமைகளையும் விளங்க வைக்கும் ஊர்திகளையும் தயார் செய்து கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கிறது.

## ஊழியர் மறியல் போராட்டம்

பண்டத்தரிப்பு, பெப் 24
பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறி ஆலை ஊழியர்கள் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மறியல் போராட்டம் நடத்தினர்.

மின்தறி ஆலை முடப்பட உள்ளதால் வேலை இழக்கும் ஆபத்தில் உள்ள ஊழியர்கள் நிர்வாகத்துடன் சில விஷயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சு வெற்றி அளிக்காததால் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மறியல் போராட்டத்தின் விளைவாக பொது முகாமையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சனிக்கிழமை கடமைக்குச்செல்ல முடியவில்லை.

மின்தறி ஆலை, பொது முகாமையாளர் அலுவலகம் என்பன ஒரே வளவிலேயே உள்ளன.

## விளையாட்டரங்கு

## பற்றிக்ஸ் பெருவெற்றி

### 121 ஓட்டங்களுடன் சரிந்தது இந்து

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோண்சன். —

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ் இந்துக் கல்லூரிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்டஓவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி பெருவெற்றியடைந்தது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த சிநேகபூர்வ ஆட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

யாழ் இந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் திறமையாக ஆடிய போதிலும் அடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் நிதானமின்றி ஆடி மளமள வென்று தமது விக்கெட்டுக்களை இழந்தனர்.

அடுத்தடுத்து ஏற்பட்ட சரிவுகளை தடுத்து நிறுத்த முடியாத இந்து அணி 40.1 ஓவர்களில் 121 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

இந்து அணியின் தரப்பில் ராமேஸ்வரன் 29 ஓட்டங்களையும் ஸ்ரீ காந்தன் 2? ஓட்டங்களையும் புலனேந்திரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பற்றிக்ஸ் அணியின் பவப் பந்து வீச்சாளர் என் குனேஸ்வரன் 4விக்கட்டுக்களையும் ஏ. எச், ரெட்ஞனந்தன் 3விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் எஸ். ஏ. கிளஸ்ரன், பி. ஆதவன் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து நிதானமாக துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி 43.1 ஓவர்களில் 4 விக்கட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

பத்திநாதர் 49 ஓட்டங்களையும் வின்ஸ்லோ, நிமல்ராஜ், ஆகியோர் முறையே 24, 19 ஓட்டங்களையும், கிளஸ்ரன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

உமையாளன், பிரபானந்தன் (அபி) ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

முதலாவது டெஸ்ட்

## குப்புற வீழ்ந்தது இலங்கை

### பாகிஸ்தான் விக்கெட்டுகள் குறித்து சர்ச்சை

கண்டி, பெப். 24
பாகிஸ்தானுக்கு எதிராக கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி குப்புற விழுந்தது.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணியின் சகல விக்கெட்டுகளும் 109 ஓட்டங்களுக்குள் சுருண்டு வீழ்ந்தன.

நேற்றைய ஆட்ட முடிவின்போது பாகிஸ்தானும் தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இந்த நான்கு விக்கெட் இழப்புகள் குறித்தும் மத்தியஸ்தர்கள் வழங்கிய தீர்ப்பு சர்ச்சைக்குரியதாக இருந்தது.

இந்த நான்கு விக்கெட்டுகளும் ''எல். பி டபிள்யு'' முறையிலேயே விழ்த்தப்பட்டன.

கிரிக்கெட் விமர்சகர்கள் மத்தியஸ்தர்களின் இந்த தீர்ப்புகள் குறித்து இரண்டுபடக் கருத்து வெளியிட்டார்கள்.

நேற்றைய ஆரம்பத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன.

இறுதி துடுப்பாட்டக்காரர்கள் ஒருவாறு சமாளித்து இலங்கையின் ஓட்ட எண்ணிக்கையை 109 இற்கு உயர்த்தினர்.

இலங்கை தரப்பில் அர்ஜுன ரணதுங்க 18, அஸந்த டி மெல் 23, அசோக டி சில்வா 10, அரவிந்த டி சில்வா 11 ஓட்டங்களை எடுத்தனர். எதிரி வரிசையின் 16 ஓட்டங்கள் கிடைத்தன.

பாகிஸ்தான் தரப்பில் பந்துவீச்சாளர்கள் இம்ரான் கான், அகமட், அப்துல் காதிர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்கள்.

நேற்றைய ஆட்ட முடிவின்போது பாகிஸ்தான் 4 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முகமட் நஸார் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

## கஷ்டங்களை ..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மீட்பு நிலையை அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளத்தில் எழுகிறது.

கடவுள் நம்பிக்கையோடு கூடிய செயல்களுக்கு என்றும் வெற்றியுண்டு என்பதை மெய்ப்பிக்கும் கடமை ஆத்மீக வாதிகளுக்கு உண்டு. இந்த நெறியிலே நின்று எமது பண்பாட்டுக்கும் இனத்துக்கும் மொழிக்கும் பெருந் தீங்கு வெள்ளம் போல் பெருகி வந்த போது தடுத்து நிறுத்தி அரண் போல நின்று காத்தவர்கள் நமது நாயன்மார்களே. இதனையுணர்ந்து செயற்பட வேண்டிய கடமை அனைவருக்குமுண்டு.

மனிதனை மனிதனைக் காண்கிற கண்கள் இன்று இந்த உலகில் மழுங்கி விட்டன. வேறுபாடும் கூறுபாடும் மாறுபாடும் கற்பித்துச் சமூகத்தில் களங்கம் ஏற்படுத்தி வாழுமியல்பு சைவ மக்களிடையே பல காலமாக ஒரு சாபக் கேடாக அமைந்துவிட்டது.

இவை மெல்ல மெல்ல விலகி ஒளி மயமாய சமுதாயமொன்று உருவாக வேண்டுமானால் ஒன்றுபட்டுப் பிரார்த்தனை பண்ணி தானமதருத் நிகழ்ச்சிகளில் உள்ளத்தைச் செலுத்தி ''அன்பே சிவம்'' என்று அனைவரும் வாழப் பழகுன்று கொள்வோமாக

இலங்கைக்குத்

## தீவிரவாதிகளை அனுப்புங்கள் பூரண பாதுகாப்பு வழங்குவோம்

### பௌத்த சங்கங்களின் சம்மேளனத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24
தமிழ்நாட்டில் உள்ள தீவிரவாதிகளைத் திருப்பி அனுப்புங்கள். அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்குவோம்.

இப்படி இலங்கை சிங்கள பௌத்த சங்கங்கள் சம்மேளனத் தலைவர் திரு. எட்மண்ட் பனுகொட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தீவிரவாதிகள் இயங்கும் வரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அப்படிக் காணுவதும் கஷ்டமான செயல்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளினால் ஆத்திரப்படாமல் பெரும்பாலான சிங்கள மக்கள் அமைதியான தீர்வையே காண விரும்புகின்றனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இது விடயத்தில் நீங்கள் நல்லெண்ணம் காட்டி உதவுங்கள்.

உதவுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டது தீவிரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான்.

இப்படி திரு. பனுகொட தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அப்பர் சுவாமிகள் பவனி விழா

யாழ்ப்பாணம், பெப் 24
அப்பர் சுவாமிகளின் பவனி விழா கீரிமலையிலிருந்து ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.

இன்று 24ஆம் திகதி, திங்கட்கிழமை கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக அப்பர் சுவாமிகள் திருவுருவச் சிலை பவனி வரும்.

அங்கிருந்து பவனியாகப் புறப்படும் அப்பர் சுவாமிகள் யாழ் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் அமர்ந்து வீற்றிருப்பார்.

அப்பர் சுவாமிகள் திருவுருவச் சிலை திருக்கேதீஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது

தமிழீழம் கோரிக்கை:

## ஜே. ஆர். தமது நிபந்தனையை வாபஸ் பெற வேண்டும்

### லண்டனில் சிவசிதம்பரம்

லண்டன், பெப். 23
தமிழ் ஈழம் கோரிக்கையைக் கைவிடவேண்டும் என்று திரு. ஜெயவர்த்தன நிபந்தனை போடுகிறார்.

அப்படி நிபந்தனை போடுவதை முதலில் அவர் நிறுத்தவேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் லண்டனில் முழக்கம் இட்டார்.

லண்டனில் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் திரு. சிவசிதம்பரம் இப்படிச் சொன்னார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் சொன்னதாவது;

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண திரு. ஜெயவர்த்தன 9 நிபந்தனைகளை விதித்திருக்கின்றார்.

தமிழ் ஈழம் கோரிக்கையைக் கைவிடவேண்டும் என்பதும் அவற்றில் ஒன்று.

இப்படிக் கேட்பதை முதலில் திரு. ஜெயவர்த்[தன ...] திரு. ஜெயவர்த்தனவின் 9 நிபந்தனைகளுக்கு பதில் அனுப்பப்படும்.

அதுபற்றி நாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பரம்பரை பரம்பரையாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் பூமி. இவற்றைப் பிரிக்க அனுமதி வழங்க முடியாது. எமது தாயகம் இணைந்தே இருக்கவேண்டும்.

இப்படி திரு. சிவசிதம்பரம் சொன்னார்.

## சாரம் அணிந்த . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கச் சிற்றூழியர் ஒருவரும் அடங்குவர்.

இவர் தங்கியிருந்த விடுதியில் போராளிகள் சம்பந்தமான புத்தகப் பார்சல் ஒன்று இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களை முகாமிற்கு அழைத்து வந்தவர்கள் வரும் வழியில் கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் வைத்து துவிச்சக்கரவண்டி ஒன்றின் மீது உழவு இயந்திரத்தை ஏற்றி உடைத்து விட்டுச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## துப்பாக்கி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக லொறியைத் தொடர்ந்து செலுத்த முயற்சிக்கவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச் சூடு சாரதி இஸ்மாயில் ஹாஜி அப்து[...] தலையில் பட்ட காயத்துடன் சாரதி லொறியை 5 மைல் தூரம் ஓட்டிச் சென்றார். ஏறாவூருக்கு அருகில் வந்தவுடன் மயங்கி விழுந்தார்.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சாரதி, நேற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் மரணமானார். இம் மரணம் கொலை என்று திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ரி. சிவநாதன் தீர்ப்பளித்தார்.

## இனியும் சகிக்க முடியாது . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கொண்டு தான் செய்கின்றனவா? அல்லது கட்டுப்பாட்டை மீறித்தான் இப்படிக் காட்டுமிராண்டித்தனமாகச் செயல்படுகின்றனவா?

அது எப்படி இருந்தாலும் இச் செயல்கள் படைகளினால் நடத்தப்பட்ட பயங்கரக் கொலைகளே.

### தமிழகத்தில்

இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து அப்பாவித் தமிழர் படுகொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அப்படி நிறுத்தப்படவில்லை என்றால் தமிழ் நாட்டில் கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படும்.

தற்சமயம் உள்ள சூழ்நிலையில் இலங்கை அரசினால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட நவீன ஆயுதங்களுடன் விமானத் தாக்குதல்களையும் நடத்த இலங்கை அரசு தொடங்கிவிட்டது.

இலங்கையில் தமிழர் தாக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து தமிழ் நாட்டில் ஹர்த்தால்களும் ஊர்வலங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

### இந்தியா முழுவதற்கும் வேதனை

இலங்கைத் தமிழர்படும் இன்னல்கள் தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, முழு இந்தியாவுக்குமே வேதனை தரக் கூடியதாகும்.

போராளிகளைக் கட்டுப் படுத்தும்படி இலங்கை அரசு இந்தியாவைக் கோருகிறது.

அதே சமயம் ஆயுதப் படையை ஏவி தமிழரைக் காட்டுமிராண்டித் தனமாக கொலை செய்கிறதே! இதற்கு இலங்கை அரசு என்ன பதில் கூறப் போகிறது?

இப்படி திரு. ராமச்சந்திரன், பிரதமர் காந்தியிடம் தொலைபேசியில் கேட்டார்.

### பிரதமர் பதில்

பிரதமர் காந்தி பதிலளிக்கையில் சொன்னதாவது முழு விஷயங்களையும் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வருவேன்.

இலங்கை அரசுக்கு இது சம்பந்தமாக அறிக்கை ஒன்று அனுப்பப் படும்.

அந்த அறிக்கைக்கு இலங்கை அரசிடம் இருந்து உரிய பதில் கிடைக்காது போனால் மாற்று நடவடிக்கை என்ன எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும்– என்றார்.

## தாக்குதலே . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் குற்றவாளி நிலையில் உள்ளது.

இலங்கையில் ஒரு கோடி 50லட்சம் மக்கள் உள்ளனர். அவர்களில் 12.6 சதவீத மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது.

— இப்படி திரு .சிவசிதம்பரம் சொன்னார்.

ஒரு கட்டத்தில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட சிங்கள பிரதிநிதி திரு. டக்ளஸ் பெர்ணன்டோ குறுக்கிட்டு ''நாம் சமாதானத்தையே விரும்புகிறோம்'' —என்று கூறினார்.

இன்னொரு சிங்களப் பிரதிநிதி ''தமிழ்-சிங்கள பிரச்சினையை சமாதானமாகத் தீர்ப்பதையே நாம் விரும்புகிறோம்''— என்று சொன்னார்.

'குழப்பநிலையில் உள்ள தீர்வு' —என்ற தலைப்பில் இக்கருத்தரங்கு நடந்தது.

கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் 'பல இனங்கள் வாழும் நாட்டில் தமிழ்த் தேசியம்' — என்ற தலைப்பில் பேசினார்.

'பல இனங்கள் வாழும் நாட்டில் பௌத்த தேசிய வாதம்' என்ற தலைப்பில் பேச தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் அழைக்கப் பட்டிருந்தார்.

ஆனால் அழைப்பை அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இக்கருத்தரங்குக்கு ஒக்ஸ்போர்ட் மாணவர் யூனியன் தலைவர் செல்வன். ஜே. ஆர். வில்ஸன் ஒழுங்கு செய்து இருந்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 24-02-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org